பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
14 07 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒடிசா மாநிலத்தில் இன்றும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளல் கலந்துகொள்கிறார்.
- வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக சீனா செல்கிறார்.
- சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள இந்தியாவின் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 வீரர்கள் இன்று பூமிக்கு புறப்படுகின்றனர்.
- உல்ஃபா-ஐ தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 3 முக்கிய தலைவர்கள் மியான்மரில் நேற்று கொல்லப்பட்டனர்.
- இங்கிலாந்துக்கு எதிரான 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற இன்னும் 135 ரன் தேவை.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒடிசா மாநிலத்தில் இரண்டு நாள் பயணமாக இன்று புவனேஸ்வர் செல்கிறார்.

அங்குள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் 5வது பட்டமளிப்பு விழாவில் இன்று அவர் கலந்துகொள்கிறார்.

நாளை கட்டாக்கில் உள்ள ரவீன் ஷா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் அவர், ரவீன் ஷா மகளிர் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடங்களுக்கும் அடிக்கல் நாட்டவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஒடிய மொழிக் கவிஞர் **Adikabi Sarala Das** பிறந்தநாள் விழாவில் பங்கேற்பதுடன், கலிங்கா ரத்னா விருதுகளையும் குடியரசுத்தலைவர் வழங்கவுள்ளார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று சீனா செல்கிறார்.

நாளை அந்நாட்டின் **Tian Jin** நகரில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் அவர், பல்வேறு பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்துப் பேசவுள்ளார்.

மேலும் இந்தக் கூட்டத்தின் இடையே பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

குறிப்பாக சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**-ஐ சந்தித்துப் பேசும் அவர், எல்லைப் பகுதியில் தொடர்ந்து சுமூக நிலையை கடைபிடிப்பது குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசியான் நாடுகளுடனான ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியான் - இந்தியா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஆசியான் அமைப்பு முக்கிய இடம்பெறுவதாக கூறினார்.

பாதுகாப்பு, பொருளாதாரம், சமூக கலாச்சார துறைகளில் ஆசியான் நாடுகளுடனான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா முன்னுரிமை அளிப்பதாகவும் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்தார்.

<<<<>>>>

படித்த இளைஞர்களை தொழில்முனைவோராக உருவாக்கும் வகையில் தமிழக அரசின் ஸ்டார்ட்அப் நிறுவனம் மூலம் சுயதொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடியில் நடைபெற்ற பயிற்சி முகாம் இளைஞர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்தது என்று தொழில்முனைவோர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள இந்தியாவின் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 வீரர்கள் இன்று பூமிக்கு புறப்படுகின்றனர்.

கடந்த மாதம் 25ஆம் தேதி டிராகன் விண்கலம் மூலம் விண்வெளிக்கு சென்ற இவர்கள், சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி பல்வேறு அறிவியல் சோதனைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்தியாவின் சுபான்ஷு சுக்லா மட்டும் இந்தியா சார்ந்த 7 பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இந்நிலையில் தங்களது பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புறப்படும் விண்வெளி வீரர்கள் நாளை பிற்பகல் 3 மணியளவில் பூமிக்குத் திரும்ப உள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பான உல்ஃபா - இண்டிபெண்டன்ட் அமைப்பைச் சேர்ந்த 3 முக்கிய தீவிரவாதிகள் மியான்மரில் நேற்று கொல்லப்பட்டனர்.

பரேஷ் பருவா தலைமையிலான இந்த அமைப்பின் மியான்மரில் உள்ள முகாம் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் நயான் மேதி என்கிற நயான் அசோம் உட்பட 19 தீவிரவாதிகள் உயிரிழந்ததாகவும், மேலும் 19 பேர் காயமடைந்ததாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்த தாக்குதலை இந்திய ராணுவம்தான் நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் இதை இந்திய ராணுவம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இதுபோன்ற நடவடிக்கை எதிலும் ராணுவம் ஈடுபடவில்லை என்று பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் கர்னல் எம்.எஸ். ராவத் கூறியுள்ளார்.

அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மாவும், இந்த தாக்குதலில் அசாம் காவல்துறையினருக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாகப்பட்டினம் புதிய கடற்கரையில் நாய்கள் கண்காட்சி நடைபெற்றது.

இதில் பங்கேற்ற நாய்கள் கட்டளைகளுக்கு கீழ்படிதல், வண்ணவிளக்கு அலங்காரத்தில் அணிவகுத்து வருவது போன்றவை பார்வையாளர்களை வெகுவாக ஈர்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவின் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனை உலகின் முன்னணி பணப் பரிவர்த்தனை முறையாக உருவெடுத்துள்ளது என்று நிதி ஆயோக் அமைப்பின் முன்னால் தலைமைச் செயல் அதிகாரி திரு. அமிதாப் காந்த் கூறியுள்ளார்.

இது பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாக திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் வாழ்க்கையையும் இந்தப் பரிவர்த்தனை பெருமளவு மாற்றியமைத்துள்ளதாக திரு. அமிதாப் காந்த் குறிப்பிட்டுள்ளார்.

தினம்தோறும் 650 மில்லியன் யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுவதன் வாயிலாக விசா பரிவர்த்தனையை பின்னுக்குத் தள்ளி முதலிடத்திற்கு வந்துள்ளதற்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியாவின் மொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 2023-24ஆம் நிதியாண்டில் 79 புள்ளி 7 சதவீதமாக இருந்த யு.பி.ஐ. பரிவர்த்தனை 2024-25ஆம் ஆண்டில் 83 புள்ளி 7 சதவீதமாக அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

2028-29ஆம் ஆண்டுக்குள் 20 நாடுகளுக்கு யு.பி.ஐ. பரிவர்த்தனையை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அந்த வங்கி கூறியுள்ளது.

<<<<>>>>

கார்கில் வெற்றி தினத்தையொட்டி லடாக்கில் இந்திய ராணுவம் சார்பில் மோட்டார் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

கும்பத்தான் பகுதியல் இருந்து ரங்காவா வரை நடைபெற்ற இப்பேரணியில் 50க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் கலந்துகொண்டனர்.

அப்போது 1999ஆம் ஆண்டு ஆபரேஷன் விஜய் நடவடிக்கையின்போது நாட்டிற்காக உயிர்நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<>>>>

வருமான வரி தொகையை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் மூன்று மாதங்களில் இருந்து 17 நாட்களாக குறைந்துள்ளது என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த வாரியத்தின் முதன்மை கணக்கு கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ள தகவலின்படி வருமான வரித்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தி டிஜிட்டல் கட்டமைப்புகளை அதிக அளவில் ஏற்படுத்தி இருப்பதே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியை உடனுக்குடன் பரிசீலித்து சரிகட்டுவதுடன், குறைதீர்வு முறைகளை ஆன்லைன் வாயிலாக மேற்கொள்வதன் காரணமாக வரி செலுத்துவோரின் சிரமங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2013-14ல் 11 புள்ளி 5 சதவீதமாக இருந்த திருப்பி அளிக்கப்படும் வருமான வரித்தொகை 2024-25 நிதியாண்டில் 17 புள்ளி 6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வருமான கணக்கு தாக்கல் செய்வோர் எண்ணிக்கையும் இரட்டிப்பாகி நேரடி வரி வசூல் 27 லட்சத்து 2 ஆயிரத்து 974 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் நேற்றைய 4ஆம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 58 ரன் எடுத்துள்ளது.

இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற இன்னும் 135 ரன் தேவை.

<<<<>>>>

விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை ஆட்டக்காரரான இத்தாலியின் **Jannik Sinner** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர், நடப்புச் சாம்பியனான கார்லோஸ் அல்காரசை 4-6, 6-4, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

இதன் மூலம் 148 ஆண்டுகால விம்பிள்டன் வரலாற்றில் முதல் முறையாக பட்டம் வென்ற இத்தாலி நாட்டவர் என்ற சிறப்பை பெற்றார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 230 ரன் எடுத்து 310 ரன் பின்தங்கியுள்ளது.

இந்தியா தனது முதல் இன்னிங்சில் 540 ரன் எடுத்தது.

<<<<>>>>